(முற்பகல் 9-20)

3. அறிவிப்புகள்.

(அ) 1980-81 ஆம் ஆண்டுக்கான நிதிநிலை அறிக்கையை அளிக்க ஆளுநர் நாள் குறிப்பிட்டுள்ளது.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : பேரவைக்கு ஓர் அறிவிப்பு. 1980-81 ஆம் ஆண்டிற்கான நிதிநிலை அறிக்கையை தமிழ்நாடு சட்டமன்றப் பேரவைக்கு அளிக்க, பேரவை விதி 196, உள்விதி (1)-ன்கீழ், 2—7—1980 ஆம் நாள் முற்பகலை ஆளுநர் அவர்கள் குறித்திருக்கிறார்கள் என்பதைப் பேரவைக்குத் தெரிவித்துக் கொள்கிறேன்.

(ஆ) முக்கிய எதிர்க்கட்சி, எதிர்க்கட்சித் தலைவரை அங்கீகரித்தல்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : பேரவைக்கு மேலும் ஒரு அறிவிப்பு.

பேரவை குறைவெண்ணிற்குத் தேவையான எண்ணிக்கைக்கு அதிகமாக இப்பேரவையில் இரு கட்சிகள் உள்ளன. அவையாவன—திராவிட முன்னேற்றக் கழகம் இந்திய தேசிய காங்கிரஸ் (இ) ஆகியவை ஆகும். அவ்விரு கட்சிகளில் பெரும்பான்மை எண்ணிக்கையான 38 உறுப்பினர்களைக் கொண்ட திராவிட முன்னேற்றக் கழக கட்சியை இப்பேரவையில் முக்கிய எதிர்க்கட்சியாக அங்கீகரிக்கிறேன். அதனுடைய தலைவர் டாக்டர் மு. கருணாநிதி அவர்களை எதிர்க் கட்சித் தலைவராக அங்கீகரிக்கிறேன். அக் கட்சியின் துணைத் தலைவராக திரு. க. அன்பழகன் அவர்கள் இயங்குவார்கள்.

4. ஆளுநர் உரைக்கு நன்றி கூறும் தீர்மானம்—விவாதம் (தொடர்ச்சி).

திரு. அ. ரகுமான்கான் : பேரவைத் தலைவர் அவர்களே, ஆளுநர் உரைக்கு நன்றி தெரிவிக்கின்ற இந்தத் தீர்மானத்தை கழகத்தின் சார்பாக, நான் சார்ந்திருக்கின்ற திராவிட முன்னேற்றக் கழகத்தின் சார்பாக சில கருத்துக்களை இந்த மாமன்றத்தினுடைய கவனத்திற்கு கொண்டுவர விரும்பு கிறேன். இடைவேளைக்குப் பிறகு மீண்டும் சினிமா ஆரம்பிப்பது போல்